

# சோட்டா பீமுடன் சுகாதாரம்

புத்தகம் 4

# சமூகத்தின் மந்திரச்சொல்

# சோட்டா பீமுடன்

## சுகாதாரம்

இந்த கதை புத்தகம் நாடக அடிப்படையிலான பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக எழுதப்பட்டது. இது இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது

நீங்கள் இந்த பாடத்திட்டத்தை பார்த்து பதிவிறக்கம் செய்ய https://elab.emerson.edu/hygiene/


உருவாக்கியவர்கள்

ENGAGEMENT LAB

கூட்டமைப்பாளர்கள்

GREEN GOLD Animation Pvt Ltd

MARY ANNE CHARITY TRUST MACT

ஆதரவு அளித்தவர்கள்

UBS

UBS Optimus Foundation



டோலக்பூரின் மகாராஜா, பீம், சுக்கி, ஜக்கு, டோலு,போலு, காளியா, மற்றும் ராஜூவையும் அரண்மனைக்கு அழைக்கிறார். அவர்களிடம் அசுத்த மந்திரவாதி டோலக்பூருக்கு அடிக்கடி வருவதை தடுக்கவும், அவனை முற்றிலுமாக ஒழிப்பதற்கான ஆலோசனையையும் கேட்கிறார்.


3

அதற்கு பீம் தூய்மை மந்திரவாதியை வரவழைத்து  காரணத்தை கேட்டறியலாம் என கூற பீமும் மற்றும் நண்பர்கள் எல்லோரும் கைகளைக்கழுவி கைகழுவும் மந்திரத்தை செய்ய தூய்மை மந்திரவாதி அங்கே தோன்றுகிறார், அவரிடம் அசுத்த மந்திரவாதி மேலும் மேலும் வலுவடைவதற்கான காரணத்தை கேட்க,

அவர்  (தூய்மை மந்திரவாதி) அது ஒன்றும் மாயமோ மந்திரமோ இல்லை, டோலக்பூர் மக்கள் இன்னும் முழுதாக கழிவறையை பயன்படுத்தாமல் இருப்பதும், ஒழுங்காக சோப்பு போட்டு கைகழுவாமல் இருப்பதும் தான் காரணம் அது அவனுக்கு மேலும் பலம் சேர்கிறது என கூறுகிறார்.

அதற்கு மகாராஜா எல்லோர் வீட்டிலும் கழிவறை வசதி இல்லையே அப்புறம் எப்படி கழிவறையை அவர்கள் பயன்படுத்தமுடியும்? என கேட்க

அதற்கு தூய்மை மந்திரவாதி விலை குறைவானதும், பராமரிக்க சுலபமான கழிவறைகள்  சுலபமாக கிடைப்பதாகவும்,டாய்லட்டை பயன்படுத்துவதும், கைகளை சோப்பு போட்டு கழுவுவதும் தான் அசுத்த மந்திரவாதியை ஒழிக்க ஒரே வழி என சொல்லி விட்டு..



சோப்பு போட்டு கைகழுவ வேண்டும் என்பதை  நீங்கள் தான் எல்லோரிடமும் சொல்லி புரிய வைக்கவேண்டும் எனவும் சொல்லிவிட்டு,  தன்னுடைய படிகத்திலான மாய பந்தை வரவழைத்து அதில் டோலக்பூரில் உள்ளவர்கள் டாய்லட் பயன்படுத்தாமல் இருப்பதற்கான காரணத்தை அதன் வழியாக கேட்க அவர்கள் கைகளை சோபு போட்டு கழுவாமல் இருப்பதற்க்கு சாக்கு போக்கு, சொல்வதை மகாராஜா, பீம் மற்றும் அவன் நண்பர்களுக்கு காட்சியாக காட்டுகிறார்.

அதில் ஒருவர் கழிவறையும்,சோப்பும் விலை மிக அதிகமாக உள்ளதாக கூறுகிறார்.



ஒரு பெண் கழிவறைனாலே அசிங்கமான இடம் அதிலிருந்து வரும் நாற்றத்தை தாங்கிக்கொள்ள்வே முடியவில்லை என கூறுகிறாள்.



கழிவறை எப்போதும் இருட்டாக இருப்பதால் பயமாக இருக்கிறது என ஒரு ஆண்குழந்தை கூறுகிறது.

ஒரு பெண் சொன்னால் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பொழுதுதான் என் தோழிகளை சந்தித்து பேச முடிகின்றது என்றால் . மேலும் அவர்களிடம் பேசிக்கொண்டே நடந்து போவது பிடிக்கும் என்றால்.



ஒரு சிறுவன் ”கிருமிகளால் என்னை ஒன்றும் செய்ய முடியாது நான் அவ்வளவு பலசாலி” என கூறுகிறான்

தூய்மை மந்திரவாதி மாயபந்தை ஓரத்தில் வைத்துவிட்டு

டோலக்பூரில் பலர் சாக்கு போக்கு சொல்லி மழுப்புவதாகவும் அவர்களுக்கு சுத்தாத்தின் முக்கியத்துவத்தை சொல்லி நீங்கள்தான் புரியவைக்க வேண்டும் என பீம் மற்றும் நண்பர்களுக்கு சொல்கிறார்.

அதன் பின் பீமும் அவன் நண்பர்களும் டோலக்பூருக்கு சென்று மக்களிடம் மாயபந்தில் பார்த்தவற்றை நேராக அவர்களிடம் எடுத்து சொல்ல தொடங்குகின்றனர்.


13

அதை கேட்கும் மக்களில் சிலர் "கழிவறையும் சோப்பும் விலை மிகவும் அதிகமாக இருக்கிறதே" என சொல்ல

பீம் அவர்களிடம் "பண்டிகைகளுக்கும் லட்டு வாங்கவும் நாம் செலவு செய்வது இல்லையா" ? திறந்த வெளில மலம் கழித்து அதன் விளைவாக உடல் நலம் சரியில்லாமல் போனாலும், அதற்கு சிகிச்சை பெற மருத்துவமனைக்கு சென்றாலும் பணம் செலவாகத்தானே செய்யும்" "அதை காலத்துக்கேற்றார் போல் கழிவறையை கட்டி அதை உபயோகப்படுத்த ஆரம்பித்தால்அரோக்கியம் சீராகும் பணமும் மிச்சமாகும்" என கூறுகிறான்.

அப்போது ஒரு பெண் "கழிவறைனாலே ஒரு அசிங்கமான இடம், அதிலிருந்து வரும் நாற்றத்தை தாங்கவே முடியலயே" என சொல்ல

அதற்காக மொத்த கிராமத்தையும் அசுத்தம் செய்யலாமா? என்று சுக்கி கேட்கிறாள்
கழிவறைய பயன்படுத்துவது அசிங்கம் என நினைக்காமல் அதை உப்யேகபடுத்தினால் நம் குடிக்கும் குடி நீரிலும் உண்ணு உணவுலும் அசிங்கங்கள் கலக்காம, கிருமிகள் நம்மிடம் அண்டவிடாம தடுக்கலாமே எனவும் கூறுகிறாள்



மேலும் மலம் நிறைந்துகிடக்கும் மொத்த ஊரையும் சுத்தம் செய்வதைவிட  ஒவ்வொருத்தரும் அவரவர் கழிவறைகளை சுத்தம் செய்வது மிக சுலபம், கழிவறையை பயன்படுத்திட்டு சோப்பும் சுத்தமான தண்ணீரையும் கொண்டு நம் கைகளை கழுவிவிட்டா அங்கிருந்து வரும் கிருமிகளையும் நாம் ஒழிச்சிடலாம்  எனவும் கூறுகிறாள்.

கழிவறைனா இருட்ட பயமா இருக்கும் என சொன்ன சிறுவனிடம், திறந்தவெளிக்கு போறதுலதான் ஆபத்து  அதிகம், அங்க பாம்போ, தேளோ, கடிச்சிட்டா அது அதவிட மோசம் ஆச்சே, அப்படி கழிவறைக்கு போறதுக்கு பயமா இருந்தா  பெரியவர்களிடம் சொல்லி கழிவறைக்கு ஒரு ஜன்னல் வச்சுக்கலாம் அது காற்றோட்டமா இருக்கும் நாற்றமும் இருக்காது,  மின்விளக்கு பொருத்தி கொள்ளலாம் இல்ல  கைவிளக்கை எடுத்து கொண்டு இரவு நேரத்துலயும் யாரோட உதவியும் இல்லாமல் உபயோகிச்சுக்கலாம்.



அதில் ஒரு சிறுமி திறந்தவெளிக்கு போகும் போது தோழிகளோட பேசிக்கொண்டு போகலாம் என சொல்ல

சுக்கி வீட்டில் கழிவறை இருக்குறதால எப்போது வேண்டுமானாலும் உபயோகிக்க்லாம், இதுக்காக இருட்டும் வறை நாம காத்திருக்கவேண்டிய அவசியம் இல்ல மேலும் திறந்தவெளிக்கு போயிட்டுவர நேரமும் மிச்சமாகும் அந்த நேரத்தில் நண்பர்களோட முழுமையா விளையாடமுடியும்.



அப்போது காளியா, கிருமிகளால் என்னை ஒன்றும் செய்ய முடியாது என சொன்ன சிறுவனிடம், நானும் உன்னை போல பலசாலிதான் ஆனாலும் நான் கழிவறையை பயன்படுத்திய பின் சோப்பு போட்டு கைக்ழுவவே செய்கிறேன், மேலும் பிரபல விளையாட்டு வீரர்கள் மற்றும் நடிகர்கள் எல்லாமே இது போலதான் சுகாதாரமான முறைய பயன்படுத்துறாங்க என சொல்கிறான்.



இதைக்கேட்ட மக்களுக்கு கழிவறை மற்றும் சோப்பின் மீது இருந்த அறியாமை எண்ணம் மாறத்தொடங்குகிறது. மக்கள் ஒருவருகருவர் இவற்றை பயன்படுத்துவதைப் பற்றிய அவசியம் பற்றி பேச ஆரம்பித்திருகின்றனர்

அப்போது ஒருவர் நான் புது செல்பேசி வாங்குவதற்க்காக பணம் சேர்த்து வைத்திருக்கிறேன் அந்த பணத்தில் தான் கழிவறை கட்டப்போவதாகவும், செல்பேசியைவிட இது அத்தியவசிய்மானது எனவும் கூறுகிறார்.

ஒரு பெண் இந்த உலகத்திலேயே அம்மாதான் மிக முக்கியமானவங்க, அவங்க ஆரோக்கியமாக இருக்கவும், கிருமிகள், நோய்கள் தாக்காம இருக்கனும்னா அவங்களும் சோப்பு போட்டு கைகளைக்கழுவி தூய்மையாக இருக்க சொல்லப்போவதாகவும் கூறுகிறாள்.



பீமும் நண்பர்களும் சேர்ந்து டோலக்பூரிலுள்ள எல்லோரையும் கழிவறையை பயன்படுத்தவும் கைகளை சோப்பு போட்டு கழுவ சம்மதிக்கவைத்ததால் ஊர் சுத்தமாகவும் அழகாகவும் முக்கியமாக எல்லோரும் ஆரோக்கியமாகவும் இருப்பதால் திருப்தி அடைகின்றனர்.

அசுத்த மந்திரவாதி திறந்த வெளியில் நின்று கொண்டு கழிவுகளே இல்லை என கோபம் கொண்டு மந்திரக்கோலை எடுத்து ஏதோ மந்திரம் போட முயற்ச்சிக்க ஊர் தூய்மையாக இருப்பதால் அது வேலை செய்யாமல் போகிறது.



அப்போது அங்கு வந்த பீமிடம் அசுத்த மந்திரவாதி ”நீங்க வேனா என்ன டோலக்பூரில தோற்க்கடிச்சுருக்கலாம், ஆனா இந்தியாவுல கழிவறை பயன்படுத்தாம் எந்த கிராமம் இருக்கோ அங்க நான் போவேன்” என கூச்சலிட

பீம் அந்த அசுத்த மந்திரவாதியின் மந்திரக்கோலை பிடுங்கி தன் தலைக்கு மேலே உயர்த்தி உடைத்தெறிகிறான்.

அதன் பின் அசுத்த மந்திரவாதி டோலக்பூரை விட்டு வேறு கிராமத்துக்கு ஓடிவிடுகிறான்.



அசுத்த மந்திரவாதியை பற்றி கவலைப்படாதீங்க
பீமும் சுக்கியும் அவனை தோற்க்கடித்தது போல
உங்களாலயும் அவன தோற்க்கடிக்க முடியும்.



உங்க நண்பர்களிடமும், உறவினர்களிடமும், முறையா கழிவறையை பயன்படுத்துவது பற்றியும், தேவையான நேரங்களில் சரியா சோப்பு போட்டு கழுவுவது பற்றியும் எடுத்துச்சொல்லுங்க.

சோப்பு வாங்க நாங்க காசுக்கு எங்க போவோம்
சிக்கனம இருந்த அஓபு ஒன்னு வாங்கலாம்
சோப்பு வாங்க யோசிச்ச உடல் நலம் பாதிக்கும்
கழிவறை போனால் நட்ற்றம் அடிக்கும்
அதுக்காக ஊற நரடிக்க போரியா

கழிவறை ரொம்ப இருட்ட இருக்கு
உள்ள போக பயமா இருக்கு
வெளியே போன பாம்பு கடிக்கும்
உன்னக்கு வெளியே பாதுகாப்பு இல்ல

வெளியே போனால் அரட்டை அடிக்கலாம்
கழிவறை இருத்தல் நேரம் மிச்சம்
நேரம் இருந்தா விளையாட போகலாம்